வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந,க.எண். 3865/ஆ4/2023 நாள் : 01.04.2024

பொருள் : தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2023–2024ம் கல்வியாண்டு 1 ஆம் வகுப்பு முதல் 9 வகுப்பு மாணவர்களுக்கான இறுதித் தேர்வுகள் திருத்திய கால அட்டவணை வெளியிடுதல் – அனைத்து வகை பள்ளிகளுக்கு – தெரிவித்தல் – சார்பு.

பார்வை : 1.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள், ந.க.எண். 19528/எம்/இ1/2023 நாள் 20.03.2024
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள், ந.க.எண். 19528/எம்/இ1/2023 நாள் 29.03.2024

-----

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகளின் படி 2023–2024 ஆம் கல்வியாண்டிற்கான 1 ஆம் வகுப்பு முதல் 9 வகுப்பு மாணவர்களுக்கான பள்ளி இறுதித் தேர்வுக்கால அட்டவணைகள் அனுப்பப்பட்டது.

மேலும் பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகளின் படி திருத்திய தேர்வுகால அட்டவணை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேலும் (optional language) தேர்வுகள் 08.04.2024 அன்று நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் விவரத்தினை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் தங்கள் பள்ளி ஆசிரியர்கள் வாயிலாகவும், தேர்வுக் கால அட்டவணையினை அறிவிப்புப் பலகையில் ஒட்டியும் அனைத்து மாணவர்கள் / பெற்றோர்கள் அறியும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் அறிவுரைகளின் படி செயல்படுமாறு அனைத்து வகை தொடக்க /நடுநிலை /உயர்நிலை /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது .

இணைப்பு:–

1. பார்வைக் கடித நகல் மற்றும் தேர்வுக் கால அட்டவணை

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து வகை தொடக்க /நடுநிலை /உயர்நிலை /மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம் .

நகல்:–

- மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தனியார்/ தொடக்கக்கல்வி), வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.